**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம். கமுதி**

**முன்னிலை : திருமதி. G. தங்க கார்த்திகா., B.Sc., B.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர். கமுதி**

**2026 ஆம் வருடம் ஜூன் மாதம் 24 ம் நாள் புதன்கிழமை**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 93/2021**
**CNR. NO.TNRM070002232021**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | கமுதி காவல்நிலையம் குற்ற எண் –470/2020 |
| | எதிரியின் விபரம் | |
| 2. | பெயர் | வழிவிட்டான் (அய்யனார்) |
| 3. | த/பெ. | பெரியசாமி |
| 4. | தொழில் | -- |
| 5. | முகவரி | முஸ்டக்குறிச்சி (இருப்பு) சேதுபதி நகர், கோட்டைமேடு, கமுதி |
| 6. | வயது | 38/20 |
| 7. | சம்பவ நாள் | 20-09-2020 ம் தேதி 13.30 மணி |
| 8. | புகார் தேதி | 20-09-2020 ம் தேதி 18.30 மணி |
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | எதிரி 22-09-2020 ம் தேதியன்று நிலைய பிணையில் சென்றுள்ளார். |
| 10. | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | எதிரி 22-09-2020 ம் தேதியன்று நிலைய பிணையில் சென்றுள்ளார். |
| 11. | கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | 16-03-2021 |
| 12. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | 16-05-2026 |
| 13. | விசாரணை முடிவுற்ற நாள் | 20-05-2026 |



THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.24 12:41:32 +0530

| | | |
|---|---|---|
| | | |
| 14. | சாட்டப்பட்ட குற்றச்சாட்டு | எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 427, 506(2) மற்றும் 4 of TNPHW act ன் கீழ் |
| | வனையப்பட்ட குற்றச்சாட்டு | எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 427, 506(2) மற்றும் 4 of TNPHW act ன் கீழ் |
| 15. | காலதாமதத்திற்கான காரணம் | எதிரியின் வருகையின்மையால் |
| 16. | அரசு தரப்பு சாட்சிகள் | <table><tr><th>சாட்சிகள்</th><th>முதல் விசாரணை</th><th>குறுக்கு விசாரணை</th></tr><tr><td>அ.சா.1</td><td>16.05.2026</td><td>16.05.2026</td></tr><tr><td>அ.சா.2</td><td>16.05.2026</td><td>16.05.2026</td></tr><tr><td>அ.சா.3</td><td>20.05.2026</td><td>20.05.2026</td></tr></table> |
| 17. | எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | 24-06-2026 |
| 18. | எதிரி தரப்பு சாட்சிகள் | இல்லை |
| 19. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 320 Cr.P.C/359 BNSS பிரிவின் படியான மனுக்கள் | குவிமுச பிரிவு 320 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு பல்வகை மனு எண். 05/2026, நாள். 16.05.2026 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு இதச பிரிவுகள் 294(b), 324, 506(2) மற்றும் 4 of TNPHW Act ன் கீழான குற்றங்கள் சமரசம் செய்ய இயலாத குற்றங்கள் என்பதால் அம்மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. |
| 20. | எதிரி/குற்றமுறையிட்டாளார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 311 Cr.P.C/348 BNSS பிரிவின் படியான மனுக்கள் | அரசுத் தரப்பில் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளரை கூடுதல் சாட்சியாக விசாரணை செய்யக் கோரி குவிமுச பிரிவு 311 ன் கீழ் மனு தாக்கல் |

| | | |
|---|---|---|
| | | செய்யப்பட்டு பல்வகை மனு எண். 06/2026, நாள். 20.05.2026 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. |
| 21. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 70(2) Crpc/ 72(2) BNSS பிரிவின் படியான மனுக்கள் | எதிரியின் வருகையின்மையால் பிடியாணையை ரத்து செய்யக்கோரி குவிமுச பிரிவு 70(2)ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு பல்வகை மனு எண். 09/2026 நாள். 24.06.2026 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. |
| 22. | அரசு தரப்பு வழக்கறிஞர் | திருமதி. N. கார்த்திகா பிரியதர்ஷினி |
| 23. | எதிரி தரப்பு வழக்கறிஞர் | திரு S. இராமநாதன் |
| 24. | எதிரியின் கூற்று | எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார் |
| 25. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | 24-06-2026 |
| 26. | வழக்கின் முடிவு குறித்து எதிரிக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | 24-06-2026 |
| 27. | நீதிபதியின் முடிவு | முடிவாக, எதிரி இதச பிரிவுகள் 294(பி), 324, 427, 506(2) மற்றும் 4 of TNPHW act ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரி கு.வி.மு.ச பிரிவு 248(1)ன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி சுதந்திரமாக விடுவிக்கப்படுகிறார். எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்யப்படுகிறது.<br><br>இவ்வழக்கில் தடயசொத்துகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, தடயசொத்துக்கள் குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. |



THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.24 12:41:47 +0530

இந்த வழக்கு 16-03-2021ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு 24-06-2026 ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை-1 திருமதி. N. கார்த்திகா பிரியதர்ஷினி அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. இராமநாதன், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை உரிய கவனத்துடன் கேட்டும், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலித்தும் இன்று **(24-06-2026)** இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.....

## <u>தீர்ப்புரை</u>

**அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையில் இருந்து வெளிப்படும் அரசு தரப்பு வழக்கு : -**

1. எதிரியானவர் புகார்தாரராகிய முருகன் என்பவரின் தங்கையான சாட்சி மகாராணி என்பவரிடம் இடப்பிரச்சனை சம்மந்தமாக அடிக்கடி பிரச்சனை செய்து வந்த நிலையில் கடந்த 20.09.2020ம் தேதி எதிரியானவர் சாட்சி மகாராணியிடம் பிரச்சனை செய்ததாக போன் மூலம் புகார்தாரரிடம் தகவல் சொல்லவும் அன்று மதியம் சுமார் 01.30 மணியளவில் புகார்தாரரும் சாட்சி சண்முகவேல் என்பவரும் சாட்சி மகாராணியின் வீட்டிற்கு சென்று வெளியே நின்று கொண்டு புகார்தாரர் எதிரியிடம் என்ன பிரச்சனை என்று கேட்டதற்கு எதிரியானவர் புகார்தாரரைப் பார்த்து என்னிடம் நீ என்னடா சுன்னி கேக்குறது என அசிங்கமாக பேசி பக்கத்து வீட்டில் இருந்த கத்திக் கம்பை எடுத்து புகார்தாரரின் வலது கையின் மேல்பகுதியில் வெட்டி சிறிய காயத்தை ஏற்படுத்தியும், விலக்க வந்த சாட்சி மகாராணியின் சேலையை பிடித்து இழுத்து அடித்தும், சாட்சி மகாராணியின் மகன் ஜெனமுருகனையும் கம்பால் அடித்து



THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.24 12:41:54 +0530

காயப்படுத்தியும், உங்களை எல்லாம் கொல்லாமல் விடமாட்டேன் என மிரட்டியும், சுமார் ரூ.2000/- மதிப்புள்ள வீட்டில் இருந்த பொருட்களையும் கண்ணாடி ஷோகேஸையும் அடித்து சேதப்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 427, 506(2) மற்றும் 4 of TNPHW act ன் கீழ் கமுதி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. குற்ற இறுதி அறிக்கையை பெற்று மேற்படி வழக்கானது நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரி பிணையில் சென்றுள்ளதால் அவருக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் அரசு தரப்பு ஆவணங்களின் நகல்கள் அவருக்கு குவிமுச பிரிவு 207 ன் படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. போதிய கால அவகாசத்திற்கு பின் 19-04-2023 ம் தேதியன்று எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிரி குற்றம் புரிந்திருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால் கு.வி.மு.ச. பிரிவு. 240(1) ன் படி எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 427, 506(2) மற்றும் 4 of TNPHW act ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து அது குறித்து கு.வி.மு.ச. பிரிவு. 240(2) ன் படி எதிரிகளுக்கு தமிழில் வாசித்து விளக்கிக் கூறி வினவப்பட்டுள்ளது. அதற்கு எதிரி தான் குற்றவாளி இல்லை என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டியுள்ளார். எனவே அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு கு.வி.மு.ச. பிரிவு. 242-ன் கீழ் உத்தரவிடப்பட்டுள்ளது.

4. குற்ற இறுதி அறிக்கையில் கண்ட பட்டியல் சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில் அ.சா.1 மற்றும் எதிரி சமாதானமாக சென்று விட்டதாக குவிமுச பிரிவு 320 ன் கீழ் மனு தாக்கல்


THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.24 12:42:02 +0530

செய்யப்பட்டுள்ளது. ஆனால் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளில் இதச பிரிவுகள் 294(b), 324, 506(2) மற்றும் 4 of TNPHW Act ன் கீழான குற்றங்கள் சமரசம் செய்ய இயலாத குற்றங்கள் என்பதால் எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சமரச மனுவானது இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.3** சாட்சிகள் விசாரிக்கப்பட்டு **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்றுப் பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. **<u>அரசு தரப்பு சாட்சியங்களின் சுருக்கம்</u>**

i. அரசு தரப்பில் அசா.1 முதல் அசா.3 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் பிறழ்சாட்சிகளாகி சாட்சியம் அளித்துள்ளார்கள்.

ii. அசா.3 கமுதி காவல்நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் ஆவார். இவர் தனது சாட்சியத்தில் சார்பு ஆய்வாளர் திரு. வெற்றி திவான் அவரது கையொப்பம் நன்கு பரிட்சயம் என்றும், ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாக கூறி சார்பு ஆய்வாளர் திரு. வெற்றி திவான் அவர்கள் கடந்த 20.09.2020ம் தேதியன்று 18.30 மணிக்கு நிலையப் பொறுப்பில் இருந்தபோது அசா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று நிலைய குற்ற எண்.470/2020 இதச பிரிவுகள் 294(b), 324, 427, 506(2) மற்றும் 4 of TNPHW Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், மறுநாள் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தும், சம்பவயிட சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், வழக்கின் எதிரியை கைது செய்து தக்க பிணையில் விடுவித்தும்,



THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.24 12:42:12 +0530

அத்துடன் வழக்கின் விசாரணையை முடித்து எதிரி மீது இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்

iii. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றிய சாட்சியங்கள் குறித்து குவிமுச.313(1)(ஆ) பிரிவின் படி கேள்விகள் கேட்க எதிரி சாட்சியங்களை பொய் என்றும், தனது தரப்பில் சாட்சிகள் இல்லை என்று தெரிவித்ததன் பேரில் எதிரி தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டது.

6. <u>தீர்வுக்குரிய பிரச்சனை :–</u>

i. எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 427, 506(2) மற்றும் 4 of TNPHW act ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபித்துள்ளதா?

ii. அவ்வாறு குற்றம் நிரூபிக்கப்பட்டிருப்பின் எதிரிக்கு கிடைக்ககூடிய தண்டனை விவரம் என்ன? என்பதே இவ்வழக்கின் தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

iii. இரு தரப்பும் வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**7. அரசு தரப்பு வழக்கினை எதிரிக்கு எதிராக நிரூபித்துள்ளதா? என்பதை முடிவு செய்ய அரசு தரப்பு சாட்சியங்களை ஆராயும் போது:–**

i. அசா.1 வழக்கின் நிகர்நிலை புகார்தாரர் ஆவார். அ.சா.2 சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக சாட்சிப் பட்டியலில் சேர்க்கப்பட்டவர் ஆவார். இவர்கள் தங்களது சாட்சியத்தில் எதிரியால் தனக்கும், ஜனமுருகன் என்பவருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும், கூட்டத்திற்குள் சென்று கீழே விழுந்ததில் காயம்பட்டதாகவும், தங்களுக்கு ஏற்பட்ட காயம் லேசான காயம் என்பதால் மருத்துவமனை சென்று சிகிச்சை பெறவில்லை என்றும், இது குறித்து கமுதி

போலீசாரிடம் சொன்ன போது போலீசார் ஒரு வெள்ளைப் பேப்பரில் கையொப்பம் (அ.சா.ஆ.1) பெற்றதாக கூறியதால் அரசுத் தரப்பில் பிறழ்சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். எனவே, மேற்படி சாட்சிகளின் சாட்சியங்கள் அரசுத் தரப்பிற்கு ஆதரவாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

ii. இவ்வழக்கில் அசா.3 ஆக விசாரணை செய்யப்பட்ட சிறப்பு சார்பு ஆய்வாளர் அவர்கள் புலன்விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் திரு.வெற்றி திவான் அவர்கள் கடந்த 20.09.2020 ம் தேதியன்று 18.30 மணிக்கு அ.சா.1 அளித்த புகார் மனுவைப் (**அ.சா.ஆ.2**) பெற்று நிலையக் குற்ற எண். 470/2020 இதச பிரிவுகள் 294(b), 324, 427, 506(2) மற்றும் 4 of TNPHW act ன் கீழ் வழக்கு பதிவு செய்து சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் (**அ.சா.ஆ.4**) மற்றும் மாதிரி வரைபடம் (**அ.சா.ஆ.5**) தயார் செய்து சாட்சிகள் இருவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், சம்பவயிட சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், எதிரிகளை 22.09.2020 ம் தேதி 18.00 மணிக்கு கோட்டைமேடு பஸ் ஸ்டாப் அருகில் வைத்து காரணம் கூறி கைது செய்து நிலையம் அழைத்து வந்து தக்க பிணையில் விடுவித்தும், அத்துடன் வழக்கின் விசாரணை முடித்து இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் அரசுத் தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் அ.சா.3 ன் சாட்சியத்தால் எவ்வித பலனும் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. எனவே, அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து மேற்படி சாட்சியங்களின் ஆய்விலிருந்து எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 427,

506(2) மற்றும் 4 of TNPHW actன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்வுக்குரிய பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் பதில் அளிக்கிறது.

iii. இறுதியாக, இந்நீதிமன்றம், எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 427, 506(2) மற்றும் 4 of TNPHW actன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் நிருபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து, மேற்படி எதிரியை குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி சுதந்திரமாக விடுவிக்கப்படுகிறார். எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்யப்படுகிறது.

iv. இவ்வழக்கில் தடய சொத்துகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, தடய சொத்துக்கள் குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் என்னால் கையொப்பமிடப்பட்டு நீதிமன்ற முத்திரை வைக்கப்பட்டு 2026ம் ஆண்டு ஜூன் திங்கள் 24ம் நாள் புதன்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.24 12:42:29 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி

**அரசு தரப்பு சாட்சிகள்:—**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. முருகன் |
| அ.சா.2 | திருமதி. மகாராணி |
| அ.சா.3 | திரு. ராமமூர்த்தி |



THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.24 12:42:34 +0530

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 20.09.2020 | புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் |
| அ.சா.ஆ.2 | 20.09.2020 | புகார் மனு |
| அ.சா.ஆ.3 | 20.09.2020 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 21.09.2020 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | 21.09.2020 | மாதிரி வரைபடம் |

**<u>அரசு தரப்பு சான்றுபொருள்:–</u>** இல்லை

**<u>எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள்:–</u>** இல்லை

**<u>குறிப்பு :–</u>**

1. எதிரி வழக்கு விசாரணையின் போது பிணையில் இருந்தார்.
2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.
3. தீர்ப்பு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.24 12:42:41 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.